**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 403/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | செந்தமிழ்ச்செல்வி |
| Father's Name/Husband Name: | செல்வராஜ் |
| Village : | காருகுடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 44 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 4 ஆஜர் . 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இந்த வழக்கின் சாட்சியத்தை பிரித்த வழக்காள C.C.306/2023 வழக்கிலும் சாட்சியமாக பதிவு செய்ய அனுமதிக்கப்படுகிறது. எதிர் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டு ஆட்சேபணை இல்லை என்று உறுதி செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கும் எதிரிகள் அரியப்புத்திரன், மேகவர்ணம், வெங்கடேசன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. சம்பவம் நடந்த சமயத்தில் என்னுடைய நிலத்தில் மக்காசோளம் பயிரிட்டு இருந்தேன். அதனை எதிரிகள் டிராக்டர் வைத்து பயிரை அழித்துவிட்டார்கள். இந்த தகவல் தெரிந்து நானும் என்னுடைய நாத்தனார் சிவகாமியும் சம்பவ இடம் சென்று பார்த்த போது நான்கு எதிரிகளும் என்னுடைய காட்டில் இருந்த சோளத்தை டிராக்டர் மூலம் அழித்து கொண்டிருந்தார்கள்.

நாங்கள் சென்று எதிரிகளிடம் எதற்காக எங்கள் தோட்டத்தில் உள்ள பயிரை அழிக்கீறிர்கள் என்று கேட்ட போது எதிரிகள் என்னை தேவிடியா என்று திட்டி கைகளால் என்னை அடித்தார்கள். நான் அணிந்திருந்த சேலையை கிழித்து விட்டார்கள். அடிபட்ட உடன் நான் மயக்கமாகி விட்டேன். என்னுடைய நாத்தனார் சிவகாமி என்னை 108 ஆம்புலன்ஸ் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். மருத்துவமைனக்கு வந்த போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளில் இரண்டடு பேர் மட்டும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளனர். மற்றொரு எதிரி காலில் அடிபட்டு வெளியே உட்கார்ந்துள்ளார். மற்றொரு எதிரியான வெங்கடேசை என்னால் அடையாளம் சொல்ல முடியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் என்றைக்கு நடந்தது என்றால் 2019ம் வருடம் 9ம் மாதத்தில் இரவு 8 மணிக்கு சம்பவம் நடந்தது. தேதி ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் பக்கத்து காடுகள் எல்லாம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த காட்டில் உள்ளூர் நபர்கள் மற்றும் பொது மக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் இரவு 7 மணியிலிருந்து 8 மணி வரை சுமார் ஒரு மணி நேரம் நடந்தது. எனது உடம்பில் எந்தெந்த எதிரிகள் எங்கெங்கு அடித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து அடித்தார்கள். எதிரி வெங்கடேசன் எனது தொண்டையில் கால் வைத்து அழுத்தினார். எனக்கு மயக்கம் வந்து விட்டது. எதிரி வெங்கடேசன் காலால் எனது தொண்டையில் அழுத்தியதாகவும், புடவையை கிழித்ததாகவும் எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் என்னை எங்கு வந்து அழைத்துச் சென்றார்கள் என்றால் காட்டில் வந்து தான் அழைத்துச் சென்றார்கள் அப்போது நான் மயக்கமாக இருந்தேன். மருத்துவமனைக்கு என்னுடன் யார் வந்தார்கள் என்றால் என்னுடைய நாத்தனார் சிவகாமி. மருத்துவரிடம் எனக்கு ஏற்பட்ட காயத்தின் விவரத்தை மருத்துவரிடம் சிவகாமி தான் சொன்னாரா என்றால் ஆமாம். நான் எத்தனை நாட்கள் மயக்கமாக

இருந்தேன் என்றால் இரண்டு நாட்கள் மருத்துவமனையில் மயக்கமாக தான் இருந்தேன். நான் மயக்கமாக இருக்கும்போது போலிசாரிடம் யார் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் நான் தான் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தை எழுதி வந்து போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் நான் சொல்ல சொல்ல எழுதி கையொப்பம் பெற்றார்கள். எழுதிய வெள்ளைத்தாளில் தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் இரண்டு கையொப்பம் போட்டிருப்பேன் எனக்கு ஞாபகமில்லை. மருத்துவமனையில் போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்ற பிறகு வேறு ஏதேனும் கையொப்பம் என்னிடம் பெற்றார்களா என்றால் இல்லை. அதற்கு மறுநாள் போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நிலம் எனது சொந்த நிலமா என்றால் ஆமாம். அதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். அவர்கள் எங்களது பங்காளிகள். கண்ணம்மாள் என்பவர் யார் என்றால் எனது மாமனாருக்கு பங்காளி முறை. அந்த நிலம் கண்ணம்மாளுக்கு சொந்தம் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் அவர் தான் பயிரிட்டு வருகிறார் என்றாலும் நான் பயிரிடவில்லை என்றாலும சரியல்ல. அந்த இடத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தம் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தில் பயிரிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.